★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: புரட்டாசி 10உ செவ்வாய் (25—9—56) ★ ★ வெளியூர் : புரட்டாசி 11உ புதன் (26—9—56) [இதழ் 91

பரிசோதனைகளை பதிவு செய்துவிடும் கருவி!

மாஸ்கோ, செப். 24—

உலகின் எந்தப் பகுதியில் அணு, நீர்வளிக் குண்டுகள் வெடிக்கப்பட்டாலும், அதைப் பதிவு செய்ய கொள்ளக்கூடிய ஆற்றல் கொண்ட புதுவகையான 'சிஸ்மோகிராபிக்' கருவிகளை சோவியத் சர்க்கார் வைத்திருப்பதாகப் பத்திரிகைக் குறிப்பொன்று தகவல் தருகிறது.

மேலும், சோவியத் நாட்டில் உள்ள பல்வேறு இடங்களிலுமாக இதுபோன்ற மொத்தம் 70 கருவிகள் இருக்கின்றனவாம்!

கடந்த ஆண்டுகளில் அமெரிக்கா பரிசோதனை செய்த அணு, நீர்வளிக்குண்டுப் பிரயோகங்களைக் கூட இக்கருவிகள் பதிவு செய்துள்ளன என்று கூறப்பட்டிருக்கிறது.

நேரு சர்க்காரின் நிர்வாக இலட்சணம் இதுதானா?

தமிழ் நாட்டிற்கு ரூபாய் 400 கோடி தரமறுத்தனர்

உதவாக்கரை திட்டங்களுக்கு ஊர் மக்களின் பணத்தை வாரி இறைக்கின்றனர்

பேபி கந்தசாமியின் இடித்துரை

"சென்ற எட்டு ஆண்டுகளாக இந்தியத் துணைக் கண்டத்தில் சுதந்திர ஆட்சி நடைபெற்று வருகிறதாக இந்தியப் பிரதமர் நேரு பண்டிதரிலிருந்து இங்குள்ள காமராசர்கள் வரை நாள் தவறாமல் பெருமை பேசுகின்றனர்; ஆனால், இந்தச் சுதந்திர ஆட்சி, வெள்ளையர்களின் ஆட்சியை விடக் கொடுமை மிக்கதாகயிருக்கிறதென்று இந்திய மக்களும், குறிப்பாக நம திராவிடத்திலுள்ள அனைவருமே அவ்வப்போது எடுத்துக்காட்டியும் கண்டித்தும் வருவதை நீங்கள் அறிவீர்கள்.

"நேரு சர்க்காரின் ஆட்சியில் ஏழை - நடுத்தர மக்களுக்குத் தாழ்வும் பணம் படைத்தவர்களுக்கு மேலும்மேலும் வாழ்வும வளர்ந்துவருகிறது. அதிலும் தமிழ் நாட்டுக்கு நேரு சர்க்கார் செய்துவரும் ஓரவஞ்சனையான காரியங்களை நான் விவரிப்பதென்றால் காலம் போதாதென்று எண்ணுகிறேன்.

"நேரு சர்க்காரின் நிர்வாகம், எல்லாவற்றையும்விட விசித்திரமானதாக —தென்னாட்டு மக்கள் மனம் வேதனையடையக்கூடியதாக இருக்கிறது. இதை நான் ஏதோ எதிர்க்கட்சிக்காரன் என்ற முறையில் பேசுவதாகக் கருதக் கூடாது. அரசியலார் நியமித்த ஒரு குழுவின் அறிக்கையை வைத்துக்கொண்டே இவ்வாறு பேசுகிறேன்.

"இந்திய அரசியலார் பல்வேறு திட்டங்களுக்காகக் கோடிக்கணக்கான பணத்தைச் செலவழித்து வருகிறார்களல்லவா? அதன் விவரங்களையும் நிர்வாகத்தின் விவரங்களையும் பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் எல்லாம் வற்புறுத்திக் கேட்டிருந்தோம்; இந்திய அரசியலார் அதற்காக ஒரு குழுவை நியமித்தனர்; அந்தக் குழு ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறது; அவை அச்சடித்து எங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையில் கண்டுள்ள விவரங்கள், தென்னாட்டு உறுப்பினர்கள் அனைவரும் திடுக்கிடத் தக்கதாகயிருக்கின்றன! திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த என் போன்றவர்களின் மனம் பதறும்படியாக அவ்விவரங்கள் இருக்கின்றன, அவைகளில் சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

"பக்ரா — நங்கல் அணைக்கட்டை அடுத்து வேறு ஒரு அணைக்கட்டை நிறுவத் திட்டமிடப்பட்டதாம்; ஆனால் அணைக்கட்டு அமைக்கப்படவில்லை; அதற்குப் பதிலாகப் போலி அணைக்கட்டு அமைத்து பொய்க் கணக்கு எழுதப்பட்டிருக்கிறதாம் இதற்கு ரூ 7 இலட்சம் செலவு காட்டியிருக்கிறார்கள்

"ஒரு ஜதை மாட்டிற்கு மாதம் உணவு போட்டு வாடகை மட்டும் ரூ. 300 என்று கணக்கு எழுதப்பட்டிருக்கிறதாம்!

"இலண்டனிலிருந்து இயந்திரங்கள் வாங்கியதாக இரண்டு இலட்சம் ரூபாய் செலவு காட்டப்பட்டிருக்கிறது! ஆனால் இயந்திரம் வந்து சேரவில்லையாம்!

"நேரு ஆட்சியின் நிர்வாகத்தில் இதைவிட ஒரு பெரிய வேடிக்கை என்னவென்றால்,

(4-ம் பக்கம் பார்க்க)

டெலிவிஷன்வசதிகிடைக்குமாம்

இந்திய அரசாங்கம் போதிய ஆதரவு அளித்தால் இந்தியாவில் 'டெலிவிஷன்' வசதிகள் செய்து கொடுக்க அமெரிக்கா தயாராக இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

கே. வி. கே. சாமி படுகொலை

தங்கப்பழம் கைது

திராவிட முன்னேற்றக் கழகச் செயற்குழு உறுப்பினர் தோழர் கே. வி. கே. சாமி அவர்கள் 20-9-56 இரவு படுகொலை செய்யப்பட்டதையொட்டி, தூத்துக்குடி தங்கப்பழம் கைதுசெய்யப்பட்டு போலீஸ் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

கே வி. கே. சாமியின் கொலை சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் மேலும் 35 பேரைப் பிடித்துவைத்து போலீசார் தீவிரமாக விசாரித்து வருகிறார்கள். மாவட்ட போலீஸ் அதிகாரியும் ஏராளமான சி.ஐ.டி-களும் தூத்துக்குடியில் முகாம் போட்டிருக்கின்றனர்.

—'தினத் தந்தி'

தலைமை நிலையச் செய்தி :

கே. வி. கே. சாமி படுகொலை

தமிழகமெங்கணுமிருந்து கடித மூலமாகவும், டெலிபோன் மூலமாகவும் மாவீரன் சாமி அவர்கள் படுகொலை செய்யப்பட்டது சம்பந்தமாகத் தகவல்களை கோரி நமது கழகத் தோழர்களும், பொதுமக்களும் கேட்ட வண்ணம் உள்ளனர். அனைவரும் இந்தச் செய்தியால் ஆருத்துயர் அடைந்திருக்கின்றனர்.

போலீஸ் சுறுசுறுப்பாக நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது. தகவல்கள் இன்னும் போதுமான அளவில் கிடைக்கவில்லை. தலைமை நிலையம், தூத்துக்குடி நிலைமை பற்றி அவ்வப்போது தூத்துக்குடி நகர தி. மு. கழக செயலாளருடன் டெலிபோன் மூலம் தெரிந்துகொண்டிருக்கிறது.

துக்கமும் திகைப்பும் கப்பிக்கொண்டிருக்கும் இந்த நிலைமையில், நமது தோழர்கள் கட்டுப்பாடும் அமைதியும் காட்டிவர வேண்டுமென்பதையும், அவ்வப்போது கிடைக்கும் தகவல் 'நம் நாடு' மூலம் அறிவிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

—தலைமைக் கழகம்

தூத்துக்குடி நிலைமை

(டிரங்க் டெலிபோன் செய்தி)

தூத்துக்குடி நிலவரத்தைப் பற்றித் தலைமைக் கழகத்திலிருந்து, தூத்துக்குடி நகர தி. மு. கழகச் செயலாளர் ஜோசப் அவர்களை விசாரித்ததில் கீழ்க்கண்ட விவரங்களைத் தெரிவித்தார்.

கே. வி. கே. சாமி படுகொலை செய்யப்பட்டதையொட்டி, நேற்று தங்கப்பழத்தைப் போலீசார் கைது செய்து காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர். அதைத் தொடர்ந்து மேலும் 35 பேர், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

பெருந் துக்கத்தில் ஆழ்ந்துள்ள நமது கழகத் தோழர்கள் அமைதி குலையாமலும் கட்டுப்பாடாகவும் இருக்கவுமான முயற்சிகளில் கழக முக்கியஸ்தர்கள் ஈடுபட்டு இருக்கின்றனர். நகரெங்கும் சோகம் கப்பிக்கொண்டிருக்கிறது.

30-9-56 அன்று அண்ணு அவர்கள், துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்களுடன் தூத்துக்குடி வருகிறார் என்ற செய்தி நேற்று நகரச் செயலாளர் மூலம் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

30—9—56 அன்று தூத்துக்குடியில் நடைபெறவிருக்கும் அனுதாபக் கூட்டத்திற்குப் போலீஸ் அனுமதியும் கிடைத்துவிட்டது. அக் கூட்டத்தில் அண்ணு அவர்களும், துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்களும், மற்றும் பல தோழர்களும கலந்து கொள்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

போலீஸ் அதிகாரிகள் கொலை சம்பந்தமான புலன் விசாரணையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

7-நாள் ரிமாண்டு

சென்னை, செப். 24—

தடை உத்தரவை மீறியதாக இன்று காலை சட்ட சபைமுன் வட எல்லைப் போராட்டத்தில் கைது செய்யப்பட்ட தொண்டர்கள் ஏழு நாட்கள் 'ரிமாண்டு' செய்யப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

நாளை!

சென்னை, செப். 25—

ம. பொ. சிவஞானம் நாளையத் தினம் கிளர்ச்சிக்குத் தலைமை தாங்குவார் என்றும், நேரு பண்டிதர் தமக்கு அனுப்பிய கடிதத்தை சட்டசபைமுன் கொளுத்துவார் என்றும் அறிகிறோம்.

★

வடக்கு எல்லைக் கிளர்ச்சி

இன்று 75 பேர் கைது

சென்னை, செப். 25—

சென்னை சட்டசபை வாயிலுக்கு முன், வடக்கு எல்லைப் பாதுகாப்புக் குழுவினரால் நேற்று துவக்கப்பட்ட கிளர்ச்சி, இன்று காலை 9-மணிக்குத் தொடர்ந்து சட்டசபை வாயிலுக்கு முன நடைபெற்றது.

வடக்கு எல்லைப் பாதுகாப்புக் குழுவைச் சார்ந்த தொண்டர்கள் 75 பேர்—மூன்று பிரிவுகளாக—தோழர்கள் கண்ணப்பன் (அம்மையார்குப்பம பஞ்சாயத்து போர்டு தலைவர்), சித்தூர்-சச்சிதானந்தம், சித்தூர்-கபர்கான் ஆகிய மூவரின் தலைமையில் சட்டசபை மண்டபத்தை நோக்கிக் கோரிக்கைகளை வலியுறுத்தும் வாக்கியங்களை முழங்கிக் கொண்டு வந்தனர்.

போலீசார் நேற்றைய தினம் போலவே, அத்தொண்டர்களை வழியிலேயே தடுத்துத் தயாராயிருந்த போலீஸ்வானில் ஏற்றிச்சென்றனர். கிளர்ச்சி அமைதியாகவே நடைபெற்றது. தடியடி முதலிய யாதொரு அடக்குமுறையும் கையாளப்படவில்லை.

தமிழரசுக் கழகக் கவிஞர் கா. மு. ஷெரீப் டெலிபோன் மூலம் இவ்விவரங்களைக் கூறினார்.

நஷ்ட ஈடு தொகை அதிகரிக்கும்?

புதுடில்லி, செப். 24—

மனக் கசப்புக்கு இடமில்லாமல் கோலார் தங்கவயலை அரசாங்கம் எடுத்துக்கொள்ள விரும்புவதால், பிரிட்டிஷ் பங்குதாரர்களுக்குச் சேரவேண்டிய பங்கு ரூ.-1,64,00,000 கோடியாக உயர்த்தப்படலாம் என்று தெரிகிறது.

தமிழில் ஆட்சிச் சொற்கள் தொகுப்பு

சென்னை, செப். 24—

ஆங்கில நிர்வாகச் சொற்களுக்கு ஏற்றவாறு தமிழ்ச் சொற்களை சென்னை மாநில தமிழ்ச் சங்கம் தொகுத்து இம்மாதக் கடைசியில் முடிவாக அரசாங்கத்திற்கு அளித்துவிடுமென்று மேல்சபையில் அமைச்சர் பக்தவத்சலம் தெரிவித்தார்.

மைசூர்என்.ஜி.ஓ.க்களுக்கு இடைக்கால நிவாரணம்

பெங்களூர், செப். 24—

மைசூர் என். ஜி ஓ.-க்களுக்கு புதிய மாநிலம் அமைப்பதற்கு முன்னதாகவே மைசூர் அரசாங்கம் இடைக்கால நிவாரணம் அளிக்கும் என்று சட்ட அமைச்சர் இராமச்சந்திர ராவ் மைசூர் மேல் சபையில் அறிவித்துள்ளார்.

இடைக்கால நிவாரணத் தொகை எவ்வளவு என்பது குறிப்பிடப்படவில்லை.

ஆக்ரா, செப். 24—

ஆக்ரா மத்திய தளவாட தொழிற்சாலை ஊழியர்கள், இந்திய அரசாங்கத்தின் ஆட்குறைப்பு உத்தரவை ரத்து செய்யுமாறு கோரியும், இல்லையேல் வேலை நிறுத்தம் செய்யவேண்டிய நிலை ஏற்படுமென்றும் அறிவித்துள்ளனர்.

நம் நாடு

சென்னை 25-9-'56 செவ்வாய்

சமாதானத்தை எதிர்பார்ப்பதா?

முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இந்தியத் துணைக் கண்டம் முழுவதிலும் மின்சார வசதி பெற்ற 7,000 கிராமங்களில், தமிழ்நாட்டில் மட்டும் 3,500 கிராமங்கள் மின்சார வசதி பெற்றிருக்கின்றன எனப் பூரிப்புடன் நிதி அமைச்சர் குறிப்பிட்டிருந்தார். அதை ஒரு பெரும் மகிழ்ச்சிக்குரிய செய்தியாகவும், கிடைத்தற்கரிய பெரும் பேறாகவும் தமிழ் மக்கள் நம்ப வேண்டும் என்ற எண்ணத்திலும், அதைப் பெற்றுத்தந்த தங்களின் போராற்றலைத் தமிழ் மக்கள் நன்குணர்ந்து பாராட்ட வேண்டும்—அத்தகு பாராட்டு என்றும் கிடைத்தே தீரும் என்ற நம்பிக்கையிலும் நிதி அமைச்சர் அந்தச் சாதாரண சம்பவத்தை மிகைபடக் கூறி மகிழ்ந்திருக்கிறார்.

அம்மின்சார வசதியைப் பெறுவதற்குப் போராற்றல் எதுவும் தேவையில்லை என்றும், மின்சார வசதியைப் பெற்றுள்ள வகையிலும் அமைச்சரவையின் அபாரத் திறமை செலவழிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை என்றும், ஒரு வேளை இம்மின்சார வசதியைப் பெறுவதற்கு அமைச்சரவையின் பெரு முயற்சி தேவைப்பட்டது எனக் கூறப்படுமானால், அது அமைச்சர்களிடம் டெல்லி கொண்டிருக்கும் அலட்சியத்தையும், டெல்லியின் அதிகாரத் திமிரையும் ஓரவஞ்சனையையும் காட்டுவதாக இருக்க முடியும் என்றும் பொருள் கொள்ளுவது பொருந்தாமல் இருக்க நியாயமில்லை.

இம்மின்சார வசதியைப் பெற அமைச்சரவை மேற்கொண்ட பெருமுயற்சிக்கும், பெற்றுள்ள மின்சார வசதியின்மூலம் கிடைக்கக்கூடிய பயனுக்கும், பெரும் முயற்சி எடுத்து மலையைக் கல்லி சிறு எலி ஒன்றினைப் பிடித்த கதையைத்தான் ஒப்புவமையாகக் கூறவேண்டும்.

இம்மின்சார வசதியைப் பெற நிதி அமைச்சர் குழாம் மேற்கொண்டதாகக் கூறப்படும் பெரும் முயற்சி, மின்சார வசதியைப் பெற்றுள்ள தமிழ்நாட்டு மக்களால் பாராட்டுவதற்குரியதாக இல்லை.

நிதி அமைச்சர் கும்பல் அரும் பாடுபட்டுப் பெற்றுத் தந்துள்ள மின்சார வசதி, தமிழ்நாட்டின் தொழில்வளர்ச்சிக்குப் பயன்படுவதாக இல்லை.

அம்மின்சார வசதி, வாட்டி வதைத்துக் கொண்டிருக்கும் கொல் வறுமையிலிருந்துத் தமிழ்நாட்டை மீட்டு, செல்வச் செழுமைக்கு ஆக்கந் தேடுவதாக இல்லை.

வேலையில்லாக் கொடுமையை விரட்டி, வேலை தரும் வாய்ப்புகளைப் பல்வாகப் பெருக்கி, தமிழ்நாட்டின் செல்வப்பெருக்கத்திற்கு வழிகோலுவதாக இல்லை.

தமிழ்நாட்டின் இன்றியமையாத் தேவைகளை முழு அளவில் இல்லையானாலும் குறைந்த அளவிலாவது, கிடைத்துள்ள மின்சார வசதி பூர்த்தி செய்வதாக இல்லை.

நிதி அமைச்சர் குழாத்தின் அரிய உழைப்பால் கிடைத்துள்ள மின்சார வசதியை இன்றில்லையானாலும், எதிர்காலத்திலாதல், தமிழ்நாட்டின் தொழில் வளத்திற்குப் பயன்படுத்த முடியாதா என்ற கேள்வி எதிர்பார்க்கக் கூடியதேயாகும்.

இந்த நியாயமான கேள்விக்கு விடை காணுமுன், முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 3,500 கிராமங்களுக்குப் பெற்றுள்ள மின்சார வசதியில் பாதியைக் கொண்டு, சேலத்தில் ஏன் உருக்குத் தொழிற்சாலை ஒன்றைத் துவக்கக்கூடாது என நாம் முன்னர் கேட்டிருந்த கேள்விக்கு விடை கண்டாக வேண்டும்.

முன் வினவிற்குக் கிடைக்கக்கூடிய விடைதான், எதிர்கால நம்பிக்கை பற்றி எழுந்த வினவிற்கும் விடையாகும்.

முன் வினவிற்குத் தரப்படும் விடைதான், கிடைத்துள்ள மின்சாரத்தைக் கொண்டு எதிர்காலத்திலாதல் தொழில் வளர்ச்சிக்கு வகைசெய்ய முடியும் என்ற நம்பிக்கையை நமக்களிக்கக்கூடியதாகும்.

சேலத்தில் உருக்குத் தொழிற்சாலை ஒன்றைத் துவங்கி, அங்கு மண்ணில் மறைந்து கிடக்கும் இரும்பை தமிழ் நாட்டு மக்களுக்குப் பயன்படு பொருட்களாக ஆக்கித் தருவதற்குரிய செயல்படும் உரிமை—அதிகாரம், இன்றைய சூழ்நிலையில் நிதி அமைச்சர் கும்பலிடம் இல்லை.

நிதி அமைச்சர் குழாம் விரும்பினும் விரும்பாவிட்டாலும், தமிழ் நாட்டு மக்கள் ஆசை கொண்டாலும் ஆசை கொள்ளாவிட்டாலும், சேலத்தில் உருக்குத் தொழிற்சாலை ஒன்றைத் துவங்கக்கூடிய அதிகாரம் சென்னை அரசாங்கத்திற்குக் கிடையாது என, திட்டவட்டமாக இந்திய அரசியல் சட்டம் ஆணையிட்ட வண்ணம் உள்ளது.

அந்தச் சட்டம் ஆட்சி செய்துகொண்டு இருக்கும் வரை, அச்சட்டம் செலாவணி ஆகிக் கொண்டிருக்கும் காலம் வரை, தங்களுக்கு தன்மானம் பிறந்து, தம மக்கள் நல்வாழ்வில் நல்லெண்ணம் ஏற்பட்டு, வாழ்வுக்குப் போராடும் நெஞ்சுரம் தோன்றி, உருக்குத் தொழிற்சாலை ஒன்றை சேலத்தில் துவங்கித்தான் தீரவேண்டும் எனக் காங்கிரஸ் ஆட்சியாளர்களே முன்வந்து முயன்றபோதிலும், வெற்றி கிட்டாது—வீழ்ச்சிதான் விளைவாக வந்துறும். இந்திய அரசியல் சட்டம் அத்தகு ஓரவஞ்சனையை, பெருங்கேட்டை உள்ளடக்கமாகக் கொண்டிருக்கிறது.

தமிழ் நாடு விரும்பும் வண்ணம் செயல்பட, தமமக்கள் மேம்பாட்டிற்குப் பாடுபட வழி உண்டா?—உண்டு—நிச்சயமாக உண்டு. அதுதான் தமிழ் நாடு—திராவிட நாடு விடுதலை இலட்சியம். நிற்க,

3,500 கிராமங்களுக்கு மின்சார வசதியைத் தேடிப் பெற்றிருப்பதாகக் கூறித் தமிழ் மக்களின் பாராட்டுதலுக்கும் பேராதரவிற்கும் பாத்திரமாகிவிட்டதாகப் பூரித்துக் கிடக்கும் நிதி அமைச்சர், பாதிகிராமங்களுக்கு செலவழியும் மின்சாரத்தைக் கொண்டு சேலத்தில் உருக்குத் தொழிற்சாலையைத் துவங்க முன்வராதது ஏன் இருக்கிறார் என்பதற்குரிய காரணத்தை, வெட்கத்தினால் அவர் கூறாது இருந்துவிட்ட போதிலும், நாம் நாட்டு மக்களுக்குக் கூறாது இருக்கப் போவதில்லை.

கிராமங்களுக்குச் செய்துள்ள மின்சார வசதியில் பாதியைக் கொண்டு சேலத்தில் உருக்குத் தொழிற்சாலையைத் துவங்க வேண்டுமே என்ற நல்லெண்ணம், நிச்சயமாகச் சொல்லுகிறோம், நிதி அமைச்சருக்கும், அவர்தம் குழாத்தினருக்கும் ஏற்பட்டு இருக்கவே முடியாது. தம் மக்கள் நல்வாழ்விலே அக்கரை கொள்ளுகின்ற சாமானிய மக்கள் செய்கின்ற அச்சிறு செயலை, பரந்த பார்வை கொண்ட நிதி அமைச்சரிடமும், தாராள புத்தி படைத்த அவர் குழாத்திடமுமா, தமிழ் மக்கள் எதிர்பார்க்க முடியும்?

நமது வினவிற்கு அவர் பதிலளிக்கமாட்டார். அப்பதிலில் வெட்கமும் துக்கமும் சரியங்காகக் கலந்து இருக்கிறது.

இந்நிலையில் நாம நிதி அமைச்சரிடம் நேர்மையான சமாதானத்தை எதிர்பார்ப்பதா?

நெருப்பில்லாமலா புகை வருகிறது?

பேச்சுவார்த்தைகள் நடைபெறவில்லையாம்

புதுடில்லி, செப். 24—

பஞ்சாப் மாநிலத்தை வாட்டி வரும் பிரச்சினைகளைச் சமாளிக்க அங்கு வாழும் பல்வேறு மக்களிடையேயும் ஐக்கியமும், பலமும் ஏற்படுவதற்கே காங்கிரஸ்—அகாலி பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன வென்றும், தேர்தல் நோக்கத்திற்காக அல்ல என்றும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அறிக்கை ஒன்று கூறுகிறது.

தானே இயங்கும் ராக்கெட் விமானி!

தானே இயங்கும் இயந்திர விமானியை முதன் முதலாக அமெரிக்காவைச் சேர்ந்த மினியாப் பாலிஸ் ஹானிவெல் ரெகுலேட்டர் கம்பெனி அமைத்திருக்கிறது.

ராக்கெட்டின் உயரக் கிளம்பி பின்பு செயற்கை கிரகம் செல்ல வேண்டிய வழியை நோக்கி வளையும்போது அந்தஇயந்திர விமானி, அந்த ராக்கெட்டுகளை உலகத்தின் தரை மட்டத்துக்கு இணையான வட்டத்தில் செலுத்தும். ராக்கெட் தனக்கிட்ட வழியில் சுற்றி வருமாறு அந்த இயந்திர விமானியினுள் உள்ள 'ஜைராஸ்கோப்பு'கள் அமைக்கப்படும்.

பிரதமருக்குப் பயமுறுத்தல்

சிங்கப்பூர், செப். 2[illegible]—

கம்யூனிஸ்டுகளிடம் தன்னுடைய மனோபாவத்தை மாற்றிக் கொள்ளாவிட்டால் பழி வாங்கப்படுவாரென்று, சிங்கப்பூர் பிரதமருக்கு சீன மொழியில் எழுதப்பட்டிருக்கும் ஓர் கடிதம் கிடைத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

தடுப்புக்காவல் சட்டத்தின் பல்வேறு பிரிவுகளின்கீழ், ஜுன் 30-ந் தேதியன்று இந்தியா முழுவதிலும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 158 என்பதாகத் தெரியவருகிறது.

பட்டினி ஊர்வலம்

கட்டிடங்களுக்கு தீ; கூட்டத்தின் மீது துப்பாக்கி பிரயோகம்

பொலிவியா, செப் 23—

வாழ்க்கைத் தரச் செலவு உயர்ந்திருப்பதைக் கண்டிக்க 'பட்டினி ஊர்வலம்' நடத்தப்பட்டது.

ஒழுங்கும், கட்டுப்பாடும் இல்லாத முறையில் கூட்டம் அரசாங்க வானொலி நிலயத்தையும், பத்திரிகை அலுவலகத்தையும் தாக்கி தீவைத்தது; பெருத்த கலகமும் மூண்டது; துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதின் காரணமாகப் பலர் மாண்டனர்.

இந்தக் கிளர்ச்சிக்கு முக்கியக் காரணம் அந்த நாட்டின் சுரங்க முதலாளிகளே என்றும், அரசாங்கம் ஈயச் சுரங்கங்களை தேசியமயமாக்கியதால் பாசிஸ்டுகள் இந்தக் 'கோஷ்டி'களை ஏவியுள்ளனர் என்றும் அரசாங்கத் தரப்பில் கூறப்பட்டிருக்கிறது.

வேடிக்கையும் - வேதனையும்!

குவாலியர், செப். 20—

குவாலியருக்கு அருகில் ஓடுகின்ற ஆறுகளில் எல்லாம் இப்போது பல ரக மிட்டாய்கள் அடங்கியப் பொட்டலங்கள் மிதந்து செல்கின்றனவாம்!

ஏன் இவ்வாறு விலை கொடுத்து வாங்கப்பட்ட மிட்டாய்கள் ஆற்று நீரில் விடப்படுகின்றன என்ற கேள்விக்குத் தரப்படும் பதில் வெகு வேடிக்கையாகவும்—ஆனால் அதே நேரத்தில் இந்தியாவில் எந்த அளவுக்கு 'நாகரீக'மும், பகுத்தறிவு 'முதிர்ச்சி'யும் ஏற்பட்டிருக்கிறது என்பதை அறிய வேதனையாகவும் இருக்கிறது.

தாங்கள் பெற்ற குழந்தைகளுக்குத் 'தோஷங்க'ள், மற்றப் 'பீடை'கள் போன்றவை ஏற்படுவதைத் தடுக்க வேண்டுமானால், பெண்களெல்லாரும் தங்கள் குடும்பத்திலிருக்கும் பிள்ளைகளில் ஒரு குழந்தைக்கு ஒரு இராத்தல் எடையுள்ள மிட்டாய் வீதம் வாங்கி அதை அப்படியே ஆற்றில் போட்டுவிடவேண்டும் என்ற ஒரு நம்பிக்கை இங்குள்ள பெண்களிடையே நிலவி வருகிறதாம்.

இந்த 'மிட்டாய் மூடநம்பிக்கை'யின் விளைவு, ஒரு தாழ்த்தப்பட்ட பெண்மணியின் உயிருக்கும் உலை வைத்திருக்கிறது.

ஆற்றில் மிதந்து சென்ற மிட்டாய்ப் பொட்டலங்களை எடுக்க வேண்டுமென்ற விருப்புடன் ஆற்றில் இறங்கியபோது, அப்பெண்மணியை ஆற்று நீர் அமிழ்த்தி அடித்துச் சென்றுவிட்டதாம்!

மிட்டாய் வியாபாரிகளுக்கு இப்போது பலத்த 'யோகம்' அடித்திருக்கிறதாம். மூடநம்பிக்கையின் விளைவாகத் தங்கள் மிட்டாய் வியாபாரமாவது தலைதூக்கி நிற்கிறதே என்று அவர்கள் பெருமைப்பட்டுக் கொண்டால்கூட அதில் ஆச்சரியமில்லைதான்!

10,000 பாகிஸ்தான் முஸ்லீம்கள்

இந்தியாவுக்குக் குடியேற மனுச் செய்துள்ளனராம்!

பாகிஸ்தானிலுள்ள இந்தியத் தூதுவர் நிலயத்திற்கு 10,000 முஸ்லீம்கள், தாங்கள் இந்தியாவிற்குக் குடியேற விரும்புவதாக மனுச் செய்துள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது.

கேட்டீரா சேதி!

வயது—167!

நியூயார்க், செப். 25—

கொலம்பியாவில் வசிக்கும் சேவியர் பெரீரா என்பவருக்கு என்ன வயது என்றே தெரியாதாம்! 1830ல் நடைபெற்ற சூழ்ச்சிகளை மட்டும் கூறுகிறார். விஞ்ஞானிகள் அவருக்கு 167 வயது இருக்கலாம் என்று மதிப்பிடுகின்றனர்.

எல்லைப் போராட்டம் அர்த்தமற்றதாம்!

காமராசர் கூறுகிறார்

சென்னை, செப். 23—

இதுவரை அமைச்சர் சுப்பிரமணியம் எல்லைக்குழு பற்றிப் பேசி வந்ததை ஆதரிக்கும் வகையில், சுற்றுப் பயணத்திலிருந்து திரும்பிய காமராசர், மத்திய அரசாங்கத்திடம் உடனடியாக எல்லைத் தகராறுகளை தீர்ப்பதற்குக் குழு ஒன்றை அமைக்குமாறு சென்னை அரசாங்கம் ஏற்கனவே வற்புறுத்தியுள்ளது என்றும், எனவே, இதற்காகப் போராட்டம் நடத்துவதில் அர்த்தமில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஏன் தரமாட்டார்கள்?

புதுடில்லி, செப் 24—

சர்க்கார் உதவியுடன் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கான திட்டத்தின்கீழ், இந்திய சர்க்கார், 1956 ஜுலை மாதத்தில், 470 வீடுகளைக் கட்டுவதற்குக் கடன்களாகவும், உதவித் தொகையாகவும் மொத்தம் ரூ. 8,72,325 வழங்கியிருக்கின்றனர்.

இத்தொகையில், நாக்பூரைச் சேர்ந்த மத்திய பிரதேச் மின்சார போர்டுக்குக் கடனாக ரூ. 1,95,645-ம்—உதவித் தொகையாக ரூ. 1,30,430-ம் கிடைக்கும். மத்திய பிரதேசத்தில் நேபா நகரில் உள்ள 'மெசர்ஸ் நேஷனல் நியூஸ் பிரிண்ட் அண்டு பேப்பர் மில்ஸ் லிமிடெட்' நிறுவனத்துக்குக் கடனாக ரூ 3,27,750-ம்—உதவித் தொகையாக ரூ. 2,18,500-மும் கிடைக்கும்.

உழைப்பால்...

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

"அத்தகைய மாவீரன் மறைவு தாங்கக்கூடியதல்ல. அவருக்கு எப்போதும் கழக வேலைதான்; வேறு எதிலும் எண்ணமில்லாதவர். அவர் குண்டர்களால் தாக்கப்படும் கடைசி நிமிடம் வரை கழகப் பணியில்தான் ஈடுபட்டிருந்திருக்கிறார்.

"பொதுச்செயலாளர் அறிக்கையின்படி 'திராவிட நாடு பிரிவினை' நாளையொட்டி, தூத்துக்குடியில் கூட்டம் கூட்டி அவரும் 17-ந் தேதி பேசியிருக்கிறார்; 23-ந் தேதி தோழியர் சத்தியவாணி முத்து அவர்கள் கலந்துகொள்ளும் கூட்டத்திற்காக ஏற்பாடு செய்துள்ளார்; நேற்றுகூட தலைமை நிலயத்திற்கு ஒரு கடிதமும், சத்தியவாணி முத்தம்மையாருக்கு ஒரு கடிதமும் எழுதியுள்ளார்; அக்கடிதம் வந்து சேருவதற்கு முன் அச்செயல் வீரனை—கழகக் காவலர்களில் ஒருவரைப் படுபாதகர்கள் நம்மை விட்டுப் பிரித்தனர். மேலும் பேச என்னெஞ்சம் குமுறுகிறது.

"உழைப்பால் உயர்ந்தவர்—
உறுதி உள்ளம் படைத்தவர்—
நற்பணியாளர் நம்மைவிட்டுப் பிரிக்கப்பட்டார்.

"மறைந்த மாவீரர் சாமி அவர்கள் எந்த உணர்ச்சியுடன் பணி புரிந்தாரோ—எந்த இலட்சியத்திற்காக பாடுபட்டாரோ, எந்த கொள்கைக்காக உயிர் விட்டாரோ அதற்காக ஓயாது பணி புரிய நாமெல்லாம் உறுதி கொள்ள வேண்டும்.

"மறைந்த மாவீரனுக்கு நாடெங்கும் நமது கிளைகளும், மற்ற அமைப்புகளும், பொதுப் பணியின் தூய்மையை உணர்ந்தவர்களும் தங்களின் இறுதி வணக்கத்தைத் தெரிவிக்க நமது பொதுச்செயலாளர் அவர்கள் சென்னை வந்தவுடன் ஆவன செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொண்டு, நம் அருமைச் செல்வம்—மறைந்தமாவீரன் சாமியின் குடும்பத்தாருக்கு என் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

தலைவர் முடிவுரைக்குப் பின் செயலாளர் அ. ச. வேலன் நன்றி கூற கூட்டம் முடிவுற்றது.

உழைப்பால் உயர்ந்தவர் - உறுதி உள்ளம் படைத்தவர் - நற்பணியாளர் நம்மைவிட்டு பிரிந்தார்

பொதுப்பணியே தனது வாழ்வின் இன்பம் என்ற கொள்கை கொண்ட கழகக் காவலனை இழந்தோம்

மாவீரன் கே. வி. கே. சாமி மறைவு குறித்து என். வி. நடராசன், க. அன்பழகன், ஏ. கோவிந்தசாமி, எம். பி. சுப்பிரமணியம், பேபி கந்தசாமி ஆகியோர் மனமுருகும் பேச்சுக்கள்

சென்னை, செப். 22—

சென்னை 29-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், 'திராவிட நாடு பிரிவினை நாள்' கொண்டாட ஏற்பாடு:செய்யப்பட்டிருந்தது; ஆனால், திடீரென தூத்துக்குடி தோழர் கே. வி. கே. சாமி அவர்கள் குண்டனொருவனால் கொல்லப்பட்டதினால் அவ்வட்டத்தினர், அதே கூட்டத்தை மறைந்த மாவீரனுக்கு அனுதாபம் தெரிவிக்கும் கூட்டமாக நடத்தினர்.

கூட்டத்திற்கு 30-வது வட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் மணிவண்ணன் தலைமை வகித்தார்.

ஏராளமான பொதுமக்கள் கூட்டத்தில் குழுமியிருந்தனர். கழகத் தோழர்கள் துக்கத்தின் அறிகுறியாகக் கருப்புச் சின்னங்களை அணிந்திருந்தனர்.

ஈடுசெய்ய முடியாத நஷ்டம்

கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் தலைவர் கூறியதாவது :—

"தி.மு.க. முன்னணித்தோழரும் அண்ணாவின் அருமை தம்பிகளில் ஒருவரும், செயல் வீரருமான தூத்துக்குடி கே. வி. கே. சாமி திடீரென்று குண்டர்களால் தாக்கப்பட்டு இறந்தார் என்ற செய்தி எனக்கு மட்டுமல்ல—உங்கள் எல்லோருக்கும் மட்டுமல்ல—நாட்டு மக்கள் அனைவருக்குமே வேதனையூட்டும் செய்தியாகும். நமது இயக்கம் ஒரு நல்ல மாணிக்கத்தை இழந்துவிட்டது என்று சொல்லத் தேவையில்லை. இந்தச் சூழ்நிலையில் என்னால் அதிகம் பேச முடியவில்லை; துக்கம் நிறைந்த உள்ளத்தோடு என்ன பேசுவது? ஒன்றும் பேச முடியாத நிலையில் உங்கள் முன் இந்த அனுதாபத் தீர்மானத்தைக் கொண்டுவருகிறேன்."

தீர்மானம் :

திராவிட முன்னேற்றக் கழகச் செயற் குழு உறுப்பினரும், நெல்லை மாவட்ட தி. மு. கழகச் செயலாளரும், தொழிலாளர் தலைவரும், செயல் வீருமான கே. வி. கே. சாமி அவர்கள் குண்டர்களால் படுகொலை செய்யப்பட்டது கண்டு இக்கூட்டம் மிகவும் வேதனையும் வருத்தமும் அடைவதுடன் அவர் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

கூடியிருந்தோர் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக இருந்தனர்.

பேபி-கந்தசாமி எம். பி.

அடுத்து தோழர் பேபி-கந்தசாமி எம். பி. அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"நம்முன் ஒரு தோழர் இறந்த சேதி கேட்டுத் திடுக்கிட்டு இங்கு வந்தேன்; வந்த இடத்தில் என்னை பேச அழைத்துள்ளார்கள். நானும் அவரும் 1937-ம் ஆண்டில் சென்னை—ஐலண்டு மைதானத்தில், பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெற்ற நீதிக் கட்சி மாநாட்டிற்குத் தொண்டர்களாக இருந்து பணியாற்றினோம். எனக்குக் கிடைத்த நல்ல நண்பர்களில் அவரும் ஒருவர். அத்தகைய நல்ல நண்பரை இழந்ததைக் கேட்டுப் பதறினேன்; உணவுகூட அருந்தவில்லை; அவர் இறந்ததற்கு ஏதோ 'சதி'தான் காரணமாகயிருக்க வேண்டும். முன்பு ஒருமுறை அவரைக் கொல்வதற்குச் சதி நடந்தது இந்த ஜனநாயக ஆட்சியில், போலீஸ் அப்பொழுதே தக்க நடவடிக்கை எடுத்திருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது. எதைத்தான் இந்த அரசாங்கம் ஒழுங்காக செய்தது? இனிமேலாகிலும் போலீஸ் உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுத்து உண்மையைக் கண்டுபிடிப்பார்கள் என நம்புகிறேன்."

க. அன்பழகன்

"எனது அருமைத் தோழர் கே. வி. கே. சாமி குண்டர்களால் தாக்கப்பட்டு, பெரியதொரு கொலையுண்டு உயிர்துறக்க நேர்ந்த நிகழ்ச்சி எல்லோருடைய உள்ளத்தையும் தொடுவது மட்டுமல்ல—அனைவரையும் எதிர்காலத்தை நினைக்கத் தூண்டுவதாய் இருப்பதுமாகும்.

"இயக்கத்தின் வரலாற்றிலேயே அவர் முக்கிய இடம் பெற்றவர்; கழகத்தோடு இரண்டறக் கலந்தவர்; தொழிலாளர் வட்டாரத்தில் அவர் சாதனைகள் மிக மிக ஏராளம். அவருடைய கொலை மிகவும் பயங்கரமானதுதான்.

"உயிர் வெல்லமல்ல; தியாகம் மிகப் பெரிதல்ல; ஆனால் கே. வி. கே. சாமியின் இழப்பு எல்லோரையும் கலக்கச் செய்கிறது.

"ஒரு அன்புத்தலைவன்—தொழிலாளத் தலைவன் இரவு 10 மணிக்குக்கூடப் பயமின்றிப் போக முடியவில்லை என்றால், அரசியல் வாதிகளுக்கு இந்த அரசாங்கம் தக்க பாதுகாப்புத் தரவில்லை என்பதை நினைத்து வெட்கப்பட வேண்டும். பொதுவாழ்வில் ஈடுபடாதவர்கள் இறந்தால் அந்தத் துக்கம் ஒருசிலருக்குத்தான் ஏற்படும்; ஆனால், கே. வி. கே. சாமி போன்ற பொதுநல ஊழியர்கள் மறைந்தால் பொதுமக்களுக்கே துயரம்; அதிலும் கொலை என்றால் மனம் துடித்துத்தான் போவார்கள்.

"யார் இந்தக் கொலையைச் செய்திருந்தாலும் அது மிகவும் கண்டிக்கத்தக்க செய்கையும் மிருகத்தனமுமாகும். எவராக இருந்தாலும், ஒரு நல்ல ஊழியனை—தொண்டனைக் கொலை செய்வது வன்மையாகக் கண்டிக்கத்தக்கதாகும்.

"பண்ருட்டியிலே மஜீதைக் கொலை செய்தனர்!

"வண்ணையம்பதியில் பாண்டியனைத் தாக்கிக் கொன்றார்கள்!

"உடையார்பாளையத்தில் வேலாயுதத்தை, தூக்குபோட்டது போல் மரத்தில் தொங்கவிட்டனர்! கண்டதென்ன?

"மக்களாட்சியில் இப்படிக் கொடுமைகள் நிகழ்வதைத் தடுக்க வேண்டும்; நல்ல சூழ்நிலையை உண்டாக்க வேண்டும்.

"தோழர் கே. வி. கே. சாமியை எனக்கு 12 ஆண்டுகளாகத் தெரியும்; 'தி. மு கழக வளர்ச்சியைக் காண வேண்டுமா—தூத்துக்குடியைப் பார்! தி. மு. கழகத்திற்குத் தொழிலாளர் ஆதரவு உண்டா—தூத்துக்குடியைப் பார்!'—என்று சொல்லும் அளவிற்கு உழைத்தார் அவர்! 'அதனால்தான் இதுவோ?'—என்றும் நினைக்கவும் தோன்றுகிறது!

"அவ்வித ஆற்றல்மிக்க நமது சாமியைப் பறிகொடுத்துவிட்டோம்; அவரது மறைவு நமது நாட்டின் எல்லையை வகுக்க — இழந்த அரசை மீட்க—நாட்டைப் பிரிக்க—விடுதலைக்குப் போராட நமக்குப் பயன்பட வேண்டும்" என்றுகூறி, 'அவர் செயல் ஓங்குக! அவர் உள்ளத்தின் பண்பு நாம் வெற்றிபெறுவதற்கு ஊக்கமளிக்கட்டும்' என்று குறிப்பிட்டு, 'நம்முன் ஒருவர்—நல்லவர்—தம்பியை இழந்து வாடும் அனைவருக்கும் ஆறுதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.'

எம். பி. சுப்பிரமணியம் எம். எல். ஏ.

"தோழர் சாமியின் பிரிவை நாம் எப்படித் தீர்த்துக்கொள்வது? அரசியல் பெரும் தொண்டு புரியக் கூடியவர்கள் கொல்லப்படும் நிலையில் நாடு இருப்பது வெட்கக்கேடானது. எல்லோருக்கும் பாதுகாப்பு அளிக்க அரசாங்கம் முன்வரவேண்டும். பத்திரிகையிலே இன்றையச் செய்தியைப் பார்ப்பவர்கள் சாமி எப்படிப்பட்டவர் என்பதைத் தெரிந்துகொள்வார்கள். நகரெங்கும் கடையடைப்பு—பள்ளிகளுக்கு மாணவர்கள் செல்லவில்லை — தொழிலாளர்கள் ஊர்வலம் சென்றனர்—பஸ்கள் ஓடவில்லை—ஆலைகள் மூடிக்கிடந்தன! அத்தகைய பெருந்தகையைக் கொலை செய்துள்ளனர் குண்டர்கள்! இது நாகரீக அரசாங்கமானால், எதிர்க்கட்சியை மதிப்பது உண்மையானால், சாமிக்குப் பாதுகாப்பு தந்திருக்கவேண்டும்.

"முன்பு ஒருமுறை யாரோ ஒரு சிலர் கொல்ல சதி செய்தனராம்; யார் என்று கண்டுபிடித்தனரா? நேருவை ஒரு ரிக்ஷாக்காரன் தடுத்ததற்குப் பல மாதங்கள் புலன் விசாரித்தனரே!

"நம் அருமைத் தோழர் சாமியை இழந்தோம்; ஆனால் அவரின் ஆற்றல், ஊக்கம் மறையவில்லை. அதை நாமெல்லாம் செய்து முடிக்க உறுதிகொள்வோம். அவர் இழப்பு ஈடுகட்ட முடியாதது தான்; எனவே, நம் துக்கத்தையும் துயரத்தையும் பகிர்ந்து கொண்டு பாடுபடுவோமாக!"

ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ.

"சாமி கொலை செய்யப்பட்டார் என்ற செய்திகேட்டு அடியெடுத்து வைக்க முடியாத நிலையில் தலைமைக் கழகத்திற்குச் சென்றேன். மாடிக்குச் செல்லவே சில நிமிடங்கள் பிடித்தது. நமது குடும்பத்தில் ஒருவர்—நெருங்கியவர் இறந்ததைப் போல உணர்ச்சியும், துக்கமும் ஏற்பட்டது. எனக்கு சாமியை மூன்று ஆண்டுகளாகத்தான் தெரியும். அண்ணா சிறையில் இருந்தபோது நான் தலைமை நிலையப் பொறுப்பாளராக இருந்தேன்; முதல் முதல் சாமியை நான் சிறையில்தான் சந்தித்தேன். அப்போது அவர்மீது சதி வழக்கு தொடரப்பட்டிருந்தது. அப்போது அவர் என்னிடம், அவருக்குச் சிறையில் உள்ள கஷ்டங்களைப்பற்றிக் கூறவில்லை; நான் எப்படி வேலை செய்யவேண்டும்—கழகத்தை எப்படி நடத்தவேண்டும் என்றுதான் ஆலோசனை கூறினார்.

"மறைந்த காந்தியாருக்கே பாதுகாப்பு அளிக்காத அரசாங்கம் தோழர் சாமிக்கு எப்படிப் பாதுகாப்பு அளிக்குமென்று எதிர்பார்க்க முடியும்?

"இனியாவது, 'குற்றவாளி யார்?' என்று கண்டுபிடித்தால் போதும். அரசியலில் இத்தகைய மிருகச் செயலில் ஈடுபடுபவர்களை அரசாங்கம் கடுமையாகத் தண்டிக்கவேண்டும்; அதுதான் அரசியல் கண்ணியமாகும்.

"காந்தியார் இறந்தபோது நாடே குமுறியது. அந்த நிலையிலே பெரியாரும், அண்ணாவும் அமைதியை நிலைநாட்டப் பாடுபட்டனர். இப்போது, காமராசர் தூத்துக்குடி போய் இருக்க வேண்டும். அவர் போகவில்லை.

"சாமியை கொலை செய்துவிட்டதாலேயே கட்சி மறைந்துவிடாது. முன்பு இரயில் நிறுத்தப் போராட்டத்தில் 4 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர்; அதன் பிறகுதான் ஏராளமானவர்கள் துடித்தெழுந்தனர்.

"இந்த நாட்டில் சாதாரணமாக 'நாய்' ரோட்டில் போகும்போது ஒருவனால் அடிக்கப்பட்டால், அடித்தவனைப் பார்த்து, 'ஏன் அடிக்கிறாய்?' என்று கேட்கிறோம். மக்கள் தலைவன் தாக்கப்பட்டிருக்கிறான்; 'கொன்றவன் யார்?' என்று தெரியும் வரையில் ஒருவரைக் குறைகூறிப் பேசுவதற்கோ, கண்டிப்பதற்கோ இல்லை; ஆனால் அரசாங்கம், கொன்றவனை உடனே கண்டுபிடித்துத் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்."

என். வி. நடராசன்

இறுதியாகத் தி. மு. க. துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் பேசியதாவது :—

"தலைவர் அவர்களே! தோழர்களே! இன்று கழகக் குறிக்கோள்களை விளக்கிப் பொதுச்செயலாளர் அறிக்கைப்படி திராவிட நாடு பிரிவினைநாள் கொண்டாடி அரசாங்கம் செய்துவரும் கொடுமைகளை மக்களுக்கு விளக்கவேண்டும் என்று கருதிய நேரத்தில், எனது அருமை நண்பரும் நீண்ட கால நட்புரிமை கொண்டவரும் கழகசெல்வமுமான தோழர் சாமி கொல்லப்பட்ட சேதி கேட்டு இடி விழுந்ததுபோல் ஆனேன். நமது தலைவர் அண்ணா அவர்களும் இச்செய்தி கேட்டுப் பேசமுடியாத அளவிற்குக் கண் கலங்கினார்கள்.

"எனக்கு சாமியை சுமார் 17-ஆண்டுகளாகத் தெரியும். என்னைப் போன்றவர்களோடு நெருங்கிய நட்பும், பந்த பாசமும் இயக்கப் பணியில் முக்கியத் தொடர்பும் கொண்டிருந்தவர். தூத்துக்குடித் தோழர்களோடு குறிப்பாக தோழர் சாமியுடன் மிகவும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்திருக்கிறேன்.

"இம்மாதம் 9-ந் தேதி சென்னையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்திற்கு அவர் வந்திருந்தார்; பல நல்ல ஆலோசனைகளைத் தந்தார்.

"அவரின் ஆர்வமும், உணர்ச்சியும், தூய்மையான எண்ணமும் பாராட்டத்தக்கதாகும். அத்தகைய ஒரு உழைப்பாளரைக் காண எத்தனை காலமாகும்? நமக்கெல்லாம் எவ்வளவு பெரிய நஷ்டம்? இந்த நஷ்டம் சுலபத்தில் ஈடு செய்ய முடியாததுதான்.

"நமது அருமைத் தலைவர் அண்ணாவிடம் அவருக்குத் தனி மதிப்பும் பாசமும் உண்டு; ஒருமுறை அண்ணா, அவரைக் கோபமாகப் பேசிவிட்டார்கள். பிறகு அவர் தவறை உணர்ந்து நல்லபடி நடந்து மீண்டும் அண்ணாவின் அன்பைப் பெற்றார்.

"எங்களிடமெல்லாம் தோழர் சாமிகாட்டிய அன்பைமரியாதையையும் நினைக்கும்போது எனக்குப் பேசமுடியவில்லை. கூட்டங்களுக்கு நாங்கள் போகும்போது அவர் காட்டிய அன்பு - பாசம் - அக்கறை எல்லாம் தாய் தந்தையர் காட்டும் அக்கறையையும் மிஞ்சிவிடும்.

"ஒருமுறை நான் தூத்துக்குடியில் பேசிய கூட்டத்தில், எதிரிகள் காலிகளை ஏவி கற்களை எறிந்தனர். உடனே சாமி மேடைக்கு வந்து, 'பேசுங்கள்; கற்களை நான் தாங்கிக்கொள்கிறேன்; நான் சாகும்வரை பேசுங்கள்,' என்று கூறி, என் பக்கத்திலே நின்று கூட்டத்தைக் கடைசிவரை வெற்றிகரமாக நடத்தினார் அன்று அவருக்கு நிறையக் காயங்கள்! அதுபோன்ற பல சம்பவங்களை நினைத்து நான் நேற்று அழுதேன்.

(2-ம் பக்கம் பார்க்க)

சென்னை 14-வது வட்டத்தில் திராவிட நாடு பிரிவினை நாள் கூட்டம்

சி. பி. சிற்றரசு கலந்துகொண்டார்

சென்னை — கொத்தவால்சாவடி 14-வது வட்ட திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில், 23-9-56 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு, தோழர் இராசமாணிக்கம் தலைமையில் திராவிட நாடு விடுதலை நாள் விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர்கள் கோ. செங்குட்டுவன், ஏ. கே. வில்வம், சி. பி சிற்றரசு ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பொதுக்கூட்ட மேடை மேல், தி. மு. கழகத் தேர்தல் சின்னமான உதய சூரியன் மிக அழகுபட அமைக்கப்பட்டிருந்தது. கூட்டத்தில் ஆயிரக்கணக்கான தோழர்கள் கலந்துகொண்டனர்.

கூட்டததின்போது, தமிழக எல்லைப் பிரச்சினைகளைத் தீர்க்க ஒரு எல்லைக்குழு அமைக்க வேண்டுமென்ற தமிழ் மக்களின் கோரிக்கையைப் புறக்கணித்த மத்திய அரசியலாரின் போக்கையும் அக்டோபர் 1-ந் தேதிக்குள் எல்லைக் குழு அமைக்க மத்திய சர்க்காரை வற்புறுத்துவோம் என்று உறுதி கூறின சென்னை சர்க்கார் அதற்கான முயற்சியை இன்றுவரை மேற்கொள்ளாதப் போக்கினையும் கண்டித்தும், உடனடியாக எல்லைப் பிரச்சினையைத் தீர்த்துவைக்குமாறு மத்திய சர்க்காரைக் கேட்டுக்கொண்டும், கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் இலட்சக்கணக்கான மக்கள் வேலை இழந்து பரிதவிக்க வேண்டிய நிலையை உண்டாக்கும் விசைத் தறியைத் திணிப்பதென்ற சர்க்காரின் கொள்கையைக் கண்டித்து, விசைத் தறியை உடனடியாகக் கைவிட்டுவிடுமாறு கேட்டுக்கொண்டும், பலகட்ட விற்பனை வரி முறையை உடனடியாக ரத்து செய்யுமாறு கேட்டுக்கொண்டும், 'எக்சைஸ்' வரி, ஜவுளி வரி ஆகியவற்றை உடனடியாகக் கைவிடுமாறு சர்க்காரைக் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தோழர் சி. பி. சிற்றரசு அவர்களுக்கு, சென்னை 16-வது வட்டம் திருவள்ளுவர் முன்னேற்றக் கழக இரவுப் பள்ளி மாணவ, மாணவிகள் படிப்பகச் சார்பில் கைத்தறித் துண்டு அணிவிக்கப்பட்டது.

செயல் வீரர் கே. வி. கே. சாமியின் சவ அடக்க நிகழ்ச்சி

பொதுச்செயலாளரின் தலைமையில் சர்வகட்சியினரின் இறுதிவணக்கம்

20—9—56 அன்று தூத்துக்குடியில் குண்டர்களால் படுகொலை செய்யப்பட்ட தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினரும், நெல்லை மாவட்ட தி. மு. கழகச் செயலாளருமான தோழர் கே. வி. கே. சாமியின் பிரேதம் 21—9—56 காலை நாகம்மையார் வாசகசாலையில் வைக்கப்பட்டு கழகத் தோழர்களும், தொழிலாளர்களும் ஏராளமான பொதுமக்களும் 'கியூ' வரிசையில் நகர்ந்து பார்த்து மனம் பதறினர்; பலர் ஓவெனக் கதறி அழுதனர்.

பின்னர் 4 மணியளவில் நீண்ட பெட்டியில் சாமியின் பிரேதம் வைக்கப்பட்டு, கண்ணாடி அமைத்ததும் அலங்கரிக்கப்பட்டதுமான வண்டியில் தோழர் சாமியின் உருவம் அனைவருக்கும் தெரியும் வகையில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

அந்த ஊர்வலத்தில் ஏராளமான மக்கள் வெள்ளம்போல் கலந்துகொண்டனர்.

சர்வ கட்சியினரும், தொழிலாளர்களும், மாணவர்களும், வியாபாரிகளும், பள்ளி ஆசிரியர்களும் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

பிரேதம் வைக்கப்பட்டிருந்த அந்த வண்டியைப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் மதுரை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் முத்து அவர்களும் தொட்டுப் பின் தொடர்ந்ததானது அனைவரையும் கண்ணீர் சிந்தச் செய்தது.

வெளியூர்களிலிருந்து வந்த கழகத் தோழர்கள் பல்லாயிரக் கணக்கில் பின் தொடர்ந்தனர்.

சவ ஊர்வலத்தின்போது ஏராளமான போலீஸ் படையினரும் அதிகாரிகளும் காவல் புரிந்துவந்தனர். நகரசபைத் தலைவரும் மற்றும் பல நிறுவனங்களைச் சார்ந்தவர்களும் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

நகரிலுள்ள எல்லாத் தொழிற்சாலைகளும், கடைகளும் அடைக்கப்பட்டிருந்தன; பஸ் போக்குவரத்தும் நிறுத்தப்பட்டது. சுருக்கச் சொல்ல வேண்டுமானால் தூத்துக்குடி நகரமே அன்று செயலற்றதாகவிருந்ததெனக் குறிப்பிடலாம்.

தோழர் கே. வி. கே. சாமியின் முயற்சியால் ஆரோக்கியபுரத்தில் கட்டப்பட்ட பள்ளியின் தோட்டத்தில் சவ அடக்கம் செய்யப்பட்டது.

தலைமைக் கழகச் சார்பிலும், மற்றும் உள்ளூர்—வெளியூர் கழகங்கள், தொழிற்சங்கங்கள், பிற கட்சிகள் சார்பில் மறைந்த மாவீரனுக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு இறுதி வணக்கம் செலுத்தப்பட்டது. பள்ளி ஆசிரியர்களும், மலர்மாலை அணிவித்து இறுதி வணக்கம் செலுத்தினர். சிலர் மனம் பதறி அழுதனர்.

செயல்வீரர் சாமிக்கு இறுதி வணக்கம் செலுத்தி அடக்கம் செய்யப்படுவதற்கு முன், பள்ளித் திடலில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் தலைமையில் தோழர்கள் இளைய பெருமாள் (சோஷலிஸ்டு), மரியதாஸ் (பி. சோ.), ஆர். எஸ். இராமசாமி (புரட்சி சோ), சவுந்திரபாண்டியன் (பார்வர்ட் பிளாக்), ஆள்வார் (தமிழரசுக் கழகம்), முருகானந்தம் (கம்யூனிஸ்டு), வெங்கடகிருஷ்ணன் (காங்கிரஸ்), பீட்டர் மொரேஸ் (தொழிற்சங்கப் பிரமுகர்); சண்முகம் (தி க), எம். எஸ். சிவசாமி (நகர தி மு க) எஸ். முத்து (மதுரை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர்) ஆகியோர் சாமியின் பொதுப்பணியைப் பாராட்டியும் அவரின் பிரிவுக்கு வருந்தியும் அவரது குடும்பத்தாருக்கு அனுதாபம் தெரிவித்தும் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்தும் பேசினர்.

சவ ஊர்வலத்தின்போது நகரெங்கும் தி. மு. கழகக் கொடிகள் தாழப் பறக்கவிடப்பட்டிருந்ததானது, தூத்துக்குடி நகர் தாயைப் பிரிந்த சேயைப் போன்ற பரிதாப நிலையை எடுத்து விளம்பிற்று.

துணைப் பொதுச்செயலாளர்

என். வி. நடராசன்— ஏ. கோவிந்தசாமி

★

சுற்றுப்பயணம்

செப். 27 : உளுந்தூர்பேட்டை பொதுக்கூட்டம்
" தி. மு கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம்
28 : கொத்தவாச்சேரி (குறிஞ்சிப்பாடி சமீபம்)

★★★★★★★★★★★★★★★★★

தூத்துக்குடிக்கு அண்ணா

துணைப் பொதுச்செயலாளர்

என்.வி. நடராசன்

வருகை

★

அண்ணா அவர்கள் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களுடன் 30—9—56 அன்று தூத்துக்குடிக்கு வருவதுடன் அன்று மாலை நடைபெறவிருக்கும் அனுதாபக் கூட்டத்திலும் கலந்து கொள்வார்கள்.

★★★★★★★★★★★★★★★★★★

செங்கற்பட்டு மாவட்டச் செயலாளர்

தி. ந. சம்பந்தம்

சுற்றுப்பயணம்

செப். 26 : பால்செட்டிசத்திரம், திருமழிசை, காட்டுப்பாக்கம், பூவிருந்தவல்லி, ஆலப்பாக்கம், மாங்காடு
இரவு : வெள்ளவேடு பொதுக்கூட்டம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

கே. வி. கே. சாமி பிரிவு

செப்டம்பர் 30: அனுதாப நாள்

பொதுச்செயலாளர் வேண்டுகோள்

திராவிட முன்னேற்றக் கழகச் செயற்குழு உறுப்பினரும், நெல்லை மாவட்ட தி. மு. கழகச் செயலாளரும், பல்வேறு தொழிற்சங்கங்களின் தலைவரும், தூத்துக்குடி நகராண்மைக் கழக உறுப்பினருமான தோழர் கே. வி. கே. சாமி அவர்கள் படுகொலை செய்யப்பட்டு, நம்மைவிட்டுப் பிரிந்தமைக்கு அனுதாபம் தெரிவிக்கவும், நமது இறுதி வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளவும் செப். 30. ஞாயிறன்று நாடெங்கும் அனுதாபக் கூட்டங்களை நடத்துமாறு திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகளை வேண்டிக்கொள்ளகிறேன்.

'அறிவகம்'
சென்னை-13
24—9—56

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திருக்குறள் வகுப்பு

26—9—56 மாலை 6 மணிக்கு சென்னை—புரசைவாக்கம், எண் 100, வேளாளத் தெரு, தொண்டைமண்டல வேளாளர் சங்கத்தில், பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் திருக்குறள் வகுப்பு நடத்துவார்.

தேர்தல் நிதி

கண்டாச்சிபுரம் தோழர் கே. கணணப்பன்—தோழியர் கல்யாணி திருமணம் தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இத்திருமணத்தின் நினைவாகத் தி மு. கழகத் தேர்தல் நிதிக்காக ரூ. 10 நன்கொடை தரப்பட்டது.

'தூத்துக்குடி என்றதும் கே. வி. கே. சாமியின் நினைவுதான் நமக்கு முதலில் வருகிறது'

'நாட்டின் விழிப்பைத் தூண்டியவர்கள் பாதையைப் பின்பற்றி அவர் மறைந்துவிட்டார்!'

சி. பி. சிற்றரசு அவர்களின் சோக உரை

"தூத்துக்குடி தோழர் சாமி அவர்களின் கொடூரமான முடிவு கேட்டு திராவிட முன்னேற்றக் கழகம் அதிர்ச்சி அடைந்திருக்கும் சோகமான நிலையில் கூடியிருக்கிறோம். கடந்த 1939-ம் ஆண்டிலிருந்தே நாம், நமது திராவிட நாடு கொள்கையை வலியுறுத்தி வந்திருக்கிறோம்; அந்தக் காலத்திலிருந்து இன்று வரையிலும் நமக்குத் துரோகம் செய்பவர்களெல்லாம் நம்மை இருட்டிலே தான் சந்தித்திருக்கின்றனர். பகலிலே நம்மை சந்திக்கும் நெஞ்சுரம் அவர்களுக்கு இன்றுவரை இல்லை. அன்றிருந்து இன்றுவரை நம் கொள்கைக்காகப் பலி கொடுத்த வீரர்களின் எண்ணிக்கை ஏராளம்.

"சூயஸ் கால்வாய் என்று கேள்விப்பட்டதும் மரணப் போராட்டத்தையும் துளியும் தயக்கமின்றி எதிர் நோக்கி நிற்கின்ற நாசரின் நினைவு எப்படி வருகிறதோ, அணுகுண்டு என்று கேள்விப்பட்டதும் எப்படி ஐசனோவரின் நினைவு எழுகிறதோ, உலகிலேயே மிகப் பெரிய புரட்சி நாடு எனக் கேள்விப்பட்டதும் எப்படி பிரான்சின் நினைவு நமக்கு வருகிறதோ அது போலவே, தூத்துக்குடி தி. மு. க. என்றதுமே தூத்துக்குடி கே. வி. கே. சாமியின் நினைவுதான் நமக்கு முதலில் வருகிறது.

"பிரான்ஸ் நாட்டின் விடுதலை விழிப்பைத் தூண்டினன் ரூசோ; ஆனால் அவன் முடிவு என்ன? 'ரூசோ எங்கே? என்று பாரீஸ் நகரம் கேட்டது—பிரான்ஸ் கேட்டது —லண்டன்மாநகரம் கேட்டது. 'ரூசோ எங்கே?' என்று தேடித் தேடி நான்கு நாட்கள் அலைந்தார்கள். கடைசியாக நதிக்கரையின் அருகில் அவன் பிணமாகக் கிடந்தான். அவன் இறந்த 10 ஆண்டுகளுக்குப் பின்னர், அந்த மக்களின் இதயத்திலே விடுதலை வேட்கையைக் கிளப்பினனே அதே மக்களால் பிரான்ஸ் நாட்டின் மிகப்பெரியதான பாஸ்டைல் சிறை சின்னபின்னமாகத் தகர்த்தெறியப்பட்டது,"

இவ்வாறு, தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் 23-9-56 அன்று சென்னை 14-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் நடைபெற்றப் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினர்.

நேரு சர்க்கார் நிர்வாக இலட்சணம்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஒரு முழுக் குருட்னுக்கு அந்தரங்க காரியதரிசி வேலை கொடுக்கப்பட்டிருப்பதாகும்.

"இப்போது நிதி அமைச்சராய் பதவி ஏற்றுள்ள டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரின் குமாரர் சாக்லேட், ஓவல்டின், பிஸ்கட் முதலியவைகளுக்கு ஏஜென்சி கேட்டிருந்தாராம்! எனவே, இந்தப் பொருள்களின் மீதிருந்த இறக்குமதித் தடை உத்திரவைத் தளர்த்தியிருக்கின்றது நேரு சர்க்கார்!

"மற்றும், பலமரங்கள் வெட்டியதாகவும், வாகனங்களில் பல கைகள் வருவதாகவும் பொய்க் கணக்கு எழுதப்பட்டிருக்கிறது.

"கோச் பாக்டரியில் சம்மட்டியடிக்க, சுத்தம் செய்யக்கூட பார்ப்பனர்களுக்கே வேலை தரப்பட்டிருக்கிறது. இந்த அநீதியைக் கண்டித்துக் கேட்டதற்கு, இதனை விசாரிப்பதற்காக ஒரு குழுவை நேரு சர்க்கார் நியமித்தனர்; அக்குழுவின் தலைவர் யார் தெரியுமா? அவரும் ஒரு பார்ப்பனர்தான!

"பாதுகாப்பு இலாகாவின் அமைச்சராயிருந்த பலதேவ் சிங், இரண்டு இலட்சம் பூட்ஸ்களுக்காக வெளிநாட்டிற்கு ஆர்டர் கொடுத்தாராம! வந்த பூட்சுகள் அனைத்தும் 'வலது கால்' பூட்சுகளாம! 'சோலஜர்'கள் என்ன செய்ய முடியும்? இடது கால்களை வெட்டிக்கொள்ள முடியுமா?

"இன்னும் இதுபோன்ற ஊழல் மிக்கக் காரியங்கள் நேரு சர்க்காரின் நிர்வாகத்தில் மலிந்து கிடக்கின்றன!

"அந்த விவரங்களையெல்லாம் அடுத்தக் கூட்டங்களில் நான் வெளியிட இருக்கிறேன்.

"இப்படி உதவாக்கரைத் திட்டங்களுக்கெல்லாம் ஏழை—எளியவர்கள் செலுத்தும் வரிப் பணத்திலிருந்து வாரி வாரி இறைக்கின்றனர் நேரு சர்க்கார்! பாடுபட்டு உழைக்கும் மக்களுக்கு சாதாரண வசதி கேட்டால் பணமில்லையென்று கூறுகின்றனர்.

"அதைவிட அநீதி, சென்னை மாநில சர்க்கார், 'இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாகிலும் ரூ 400 கோடி கொடுங்கள்' என்று நேரு பண்டிதரைக் கெஞ்சினர்கள்! வேண்டினர்கள்! என்னென்னமோ செய்தார்கள்! ஆறு யிரம் கோடி ரூபாயில் ரூ 400 கோடிகூடக் கொடுக்க மனமில்லாத நேரு சர்க்கார், இப்படி கோடிக்கணக்கான பணத்தைப் பாழாக்குகின்றனர்.

"நேரு சர்க்காரின் இந்த அநீதிகளை எதிர்த்துத் திராவிட மக்கள்—தென்னாட்டினர் அனைவரும் ஒரே மனதாக நின்று போராடவேண்டும்."

என்று, 22—9—56-ல், சென்னையில் நடைபெற்ற 29-வது வட்ட தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில், பேபி சுந்தசாமி எம்.பி. அவர்கள் குறிப்பிட்டார்.

உடன்கட்டை ஏற முயன்ற பெண்மணி

போலீசார் மீட்டுவிட்டனர்

குவாலியர், செப். 24—

ஒரு பெண்ணை உடன்கட்டை ஏறத் தூண்டியதற்காக இங்கிருந்து சுமார் 150 மைல் தொலைவுக்கப்பாலுள்ள ஷோபூர் எனுமிடத்தில் மூன்றுபேரைப் போலீசார் கைது செய்துள்ளனராம்.

குழந்தைகள் ஏதுமற்ற அப்பெண்மணி தட்டான் வேலை செய்துவரும் தனது கணவர் இறந்ததும், அவளை உடன்கட்டை ஏறத் தூண்டினதாகவும், அத்தகவல் அறிந்த போலீசார் உடனே அந்த இடத்திற்கு விரைந்து அம்மூவரையும் கைது செய்து அப்பெண்மணியையும் உடன்கட்டை ஏறுவதினின்றும் மீட்டிருக்கின்றனர் என்றும் கூறப்படுகிறது.

'குழந்தை வாத்'திற்கு 7 வயது சிறுவன் பலி!

குர்ஜா என்றழைக்கப்படும் கிராமம் ஒன்றைச் சேர்ந்த பெண்மணி ஒருவர், தமக்கு 'உபதேசம்' செய்த போலிச் சாமியார் ஒருவனின் சொல் கேட்டு, தனக்குக் குழந்தைகள் பிறக்க வேண்டுமானால், வேறு யாருடைய குழந்தையையேனும் கொன்று, அம்மகவின் இரத்தத்தில் குளித்தெழ வேண்டும் என்ற மூடநம்பிக்கையினால், தன்னுடைய மருமகன் ஒருவரின் 7 வயதுடைய பிள்ளையை கொலை செய்து இரத்த வெள்ளத்தில் குளித்ததாகச் செய்தி ஒன்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கோரச் செய்தி அறிந்த போலீசார் உடனே அங்குசென்று, அப்பெண்மணியைக் கைது செய்து காவலில் வைத்திருக்கின்றனராம்!

பூனாவில் தடையுத்தரவு

பூனா, செப். 24—

கிர்கியில் உள்ள இராணுவ பாதுகாப்பு நிலையங்களில் வேலை நிறுத்தம் முழு அளவு வெற்றிகரமாக நடைபெறுகிறதாம்.

பூனாவில் 144 தடை உத்தரவு அமுல் செய்யப்பட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.